போது போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்களுக்கு முன்னுரிமை கொடுத்து முதலிலே பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தமிழகத்திலே இதுபோன்று பல்வேறு நகரங்களிலே பிரச்சினைகள் இருக்கின்றன. நிதி ஆதாரத்தைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது ஏற்கனவே சீர்காழி நகரத்தைவிட மிகவும் போக்குவரத்து நெரிசல் அதிகமான அளவு உள்ள பல நகரங்களிலே இதுபோன்ற புறவழிச் சாலைகள் இல்லாத நிலைமை இருக்கிறது. அது சம்பந்தமாக ஏராளமான கோரிக்கைகளும் அரசுக்கு வந்திருக்கின்றன. ஆகவே, தற்போது அந்த நகரங்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து புறவழிச் சாலை அமைக்கின்ற பணியைச் செய்த பின்புதான், சீர்காழி போன்ற நகரங்களுக்குச் செய்ய முடியும். ஆகவே, தற்போது அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 269, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

269—

திருப்பூரில் புறவழிச் சாலை அமைத்தல்.

***26529**—*திரு. வெ. பழனிசாமி :*

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருப்பூர் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள சாலைகளை தற்போது போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் வகையில் மேம்பாடு செய்வதற்காக பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஐம்பது சதவீதம் மத்திய அரசு மானியத்துடன் மேற்கொள்வதற்காக, மைய அரசின் ஒப்புதல் கோரி, தமிழக அரசு 17-3-1995-ல் எழுதியுள்ளது. மைய அரசின்

1995 ஏப்ரல் 7]

ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பூர் புறவழிச் சாலை - 'ரிங் ரோடு' அமைப்பதன் மூலமாக அவினாசி, பெருந்துறை, பல்லடம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறுகின்ற வாய்ப்பும், ஒரு இலட்சம் தொழிலாளர்கள் நேரிடையாக, எளிதாக, எந்தவிதப் போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் பணிக்கு வருகின்ற சூழ்நிலையும், குறுகிய திருப்பூர் நகரத்து நெரிசலைப் போக்குவதற்கு உண்டான வாய்ப்பும் உருவாகும். அந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, மத்திய தரை போக்குவரத்துத் துறையினுடைய செயலாளர், நமது மாநிலத்திலே பணியாற்றியவர், அவர்களிடத்திலே நேரிடையாகத் தெரிவித்து, அவர்களும் திருப்பூர் நகருக்கு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளடங்கிய ஏனைய அதிகாரிகளோடு கலந்து பேசி, இவ்வாண்டு 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் முதலில் தருவதாக ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் நேரிடையாகக் கவனம் செலுத்தி, இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்கும், மத்திய அரசினுடைய நிதியைப் பெறுவதற்கும், அவர்கள் கொடுக்கும் 10 கோடி ரூபாயோடு மாநில அரசின் பங்குத் தொகையையும் போட்டு, இவ்வாண்டே அந்தப் பணியை எடுத்துக் கொள்ளுகிற வாய்ப்பு உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் அங்கே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து உடனடியாக அந்தப் பணிகளை மேற்கொண்டு, ஏறத்தாழ 5½ கோடி செலவிலே அந்த மேம்பாலம் கட்டப்பட்டு, திறக்கப்படுகின்ற நிலை உருவாகியிருக்கிறது. திருப்பூர் நகரம் ஒரு சிறந்த தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற காரணத்தினாலே மைய அரசின் சார்பிலே Ministry of Surface Transport என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறையின் சார்பாக அங்கிருக்கின்ற செயலாளர் அவர்களும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அரசு அதிகாரிகளும், பொதுப் பணித் துறை செயலாளர் அவர்களும், அந்தப் பகுதியிலே

சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு செய்து, கருத்துருக்களைத் தயார் செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக நம்முடைய நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், மைய அரசில் அந்தத் துறையோடு போய் விவாதித்து இருக்கின்றார்கள். அதற்கு இன்னும் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது பற்றி முழுமையான விவரம் வரவில்லை. 10 கோடி ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாம் 80 கோடிக்கு மேலே மதிப்பீடுகள் தயாரித்துக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அவர்கள் ஒதுக்குவதாகச் சொல்லுகின்ற தொகை போதாது என்று நாம் சொல்லியிருக்கிறோம். நாம் இன்னும் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தத் தொகை வந்தவுடன், நம்முடைய அரசின் சார்பிலே அதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியினுடைய வளர்ச்சியிலேயும், தொழிலாளர்களுடைய வளர்ச்சியிலேயும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசு கடந்த வாரத்தில் கமர்சியல் டாக்ஸ் போட்டதனுடைய விளைவாக கடுமையான தொழில் பாதிப்பு ஏற்பட்டதை இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாக சுட்டிக்காட்டிய உடன் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மாநில அரசினுடைய கருத்துக்களை கடிதம் மூலமாகத் தெரிவித்ததன் விளைவாக இன்றைய தினம் கமர்சியல் டாக்ஸ் நீக்கப்பட்டது என்ற நல்ல செய்தியை இன்றைக்கு திருப்பூர் நகரத்திற்கு அளித்திருக்கிறார்கள். அவ்வப்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கமர்சியல் டாக்ஸ் அல்ல. கமர்சியல் டாக்ஸ் என்பது இங்கே போடப்படுகிறது, அது எக்சைஸ்.

திரு. வெ. பழனிசாமி : தவறு. எக்சைஸ் வரியை இன்றைக்கு நீக்கி இருக்கின்ற இந்த நல்ல செய்தி இன்று திருப்பூர் நகரத்திற்கு வந்திருக்கிறது. ஆகவே, அதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு திருப்பூர் நகரத்திற்கு முன்னுரிமை அளிக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த ஆண்டே அந்தத் தொகையைப் பெறுவதற்குண்டான வாக்குறுதியைத் தந்த காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகப்

1995 ஏப்ரல் 7]

பிரச்சினையைக் கையாண்டால் அந்தப் பணியை எடுத்துக் கொள்கின்ற வாய்ப்பு உருவாகும். ஆகவே, முன்னுரிமை அடிப்படையில் நேரடியாகக் கவனம் செலுத்தி இவ்வாண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்குண்டான வாய்ப்பு உருவாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : நான் ஏற்கனவே தெரிவித்தது போல இது சம்பந்தமாக நானும் நம்முடைய சென்ட்ரல் டிரான்ஸ்போர்ட் மினிஸ்டருடைய செயலாளராகிய திரு. ராம்தாஸ் அவர்களிடத்திலே இது பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்களும் இது சம்பந்தமாக மத்திய அரசில் இருக்கின்ற அதிகாரிகளுடன் ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் நம்முடைய பகுதியிலேயிருந்து சென்ற செயலாளராக இருந்தாலும் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானவர். ஆகவே ஆங்காங்குள்ள நிலைகளுக்கு ஏற்பதான் நிதி ஒதுக்கி, ஆதாரங்களை அங்கிருக்கின்ற மைய அரசிலே இருந்து கொண்டு அவர் செய்ய முடியும். ஆகவே, நம்முடைய பகுதியினுடைய மக்களுக்கும், நம்முடைய பகுதியிலே இருக்கின்ற திருப்பூர் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற காரணத்தினாலேயே: முன்னுரிமை உள்ள நகரமாக இருக்கின்ற அடிப்படையிலேதான் இது போன்ற மேம்பாட்டுப் பணிகளை செய்ய வேண்டுமென்று அவரும் விரும்பி இருக்கிறார். இந்த அரசும் அதற்கான முழு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் பல்வேறு பணிகள் நான் தெரிவித்ததைப்போல மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திருப்பூர் நகரத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் பணிகள் நடைபெறுவதற்கு உண்டான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பணிகளுக்கு நேரடிக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னால், பொதுவாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றபோது, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் அவர்களால் இதற்கு முன்னுரிமை கொடுத்து, இதுபோன்ற பணிகளுக்கு நேரடி கவனம் செலுத்துவதன் காரணமாகத்தான் இன்றைக்குத் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாக இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நேரடி கவனம் என்பது எங்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ளது என்பதைச் சொல்லி, இந்தப் பணிகளை விரைவிலே செயல்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.